**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைப்பாட்டினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் (இ.க.நி)

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | இ.க.நி | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 09 | 03 மாதங்களுக்கு மேற்பட்ட நிலையான வைப்புக்கள் முதலீடுகளாகக் காட்டப்படவேண்டிய போதிலும் ரூபா 623,500 தொகையான நிலையான வைப்புக்களும் மீள முதலீடு செய்யப்பட்ட அதற்குரிய வட்டியான ரூபா 24,487 தொகையும் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 12 | ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் நிலையத்திற்கு ரூபா 589,406 தொகையினைச் செலுத்தவேண்டி ஏற்பட்டதுடன் அது தொடர்பாக வெளிப்படுத்தல்களும் செம்மையாக்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 16 | ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக ரூபா 56,883,940 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அப்பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 36 | நிலையத்திற்கு எதிராக இரண்டு ஊழியர்களால் தொடுக்கப்பட்ட இரண்டு வழக்குகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகளை கணிப்பீடு செய்யும் போது ரூபா 339,155 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 15,549 தொகையான இருப்புக் குறைவு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) i. ரூபா 10,632,988 தொகையான வியாபார கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளுக்குள் ரூபா 5,560,695 தொகையான மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டவைகளாகவும் ரூபா 215,013 தொகையான மீதி 3-5 ஆண்டுகளுக்கு

இடைப்பட்டவைகளாகவும் ரூபா 397,572 தொகையான மீதி 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவைகளாகவும் காணப்பட்டதுடன் அவற்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. ரூபா 2,881,029 தொகையான வியாபார கடன்கொடுத்தோர் மீதிகளுக்குள் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 296,099 தொகையும் 2-4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 26,117 தொகையும் 1-2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 234,093 தொகையும் இருந்ததுடன் இம் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான ரூபா 7,359,827 தொகையான சேவை வழங்குனர் முற்பணங்களின் மீதியினுள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 539,673 தொகையும் 2 - 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 458,195 தொகையும் 1 - 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 274,981 தொகையும் தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டது.

(இ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய ரூபா 25,387,601 தொகையான பெறுமதி சேர் வரிப் பணம் நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்பட்டன.

(ஈ) பிழையான சம்பள பரிமாற்றத்தின் பிரகாரம் மேலதிகமாகச் செலுத்தியுள்ள ரூபா 145,915 தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 10,084,581 தொகையான கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 2,826,437 தொகையான கடன்கொடுத்தோர் மீதிக்காக உரிய தரப்பினர்களினால் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் இடம்பெற்றிருக்காமையினால் அவ்விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கோ அல்லது கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு | 2008,2009 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி) | |
| நி.பி 271(2) (ஆ) | செலுத்தப்படாத சம்பளங்களும் ஊதியங்களும் 14 நாட்கள் முடிவில் மிகை அறவீட்டுக் கணக்கிற்கு, வருமானத்திற்கு அல்லது ஏனைய குறிப்பிடப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 63,956 தொகையான செலுத்தப்படாத சம்பளமும் ஊதியமும் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவு ரூபா 3,902,794 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதனோடொத்த பற்றாக்குறை ரூபா 18,279,718 ஆக இருந்தது. இதற்கிணங்க, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 14,376,924 ஆல் முன்னேற்றம் ஏற்பட்டமைக்கு மொத்த வருமானம் ரூபா 6 மில்லியனால் அதிகரித்தமை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள் ரூபா 6 மில்லியனால் குறைவடைந்தமை, செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 4 மில்லியனால் குறைவடைந்தமை என்பன தாக்கமளித்துள்ளன.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 பௌதீகச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1983 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப உபகரணங்களின் எண்ணிக்கை 43 ஆக இருந்ததுடன் அதில் 18 உபகரணங்களுக்கு மாத்திரம் ஆக்க உரிமை அதிகாரப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 17 ஆண்டு காலத்தில் உருவாக்கப்பட்ட 43 தொழில்நுட்ப உபகரணங்கள் 897 சிறிய கைத்தொழிலாளர்களுக்கு அக்காலப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 82 நபர்கள் மாத்திரமே அதிகாரப்பத்திரத்தினை புதுப்பித்திருந்தார்கள்.

(இ) நிலையத்தின் 5 ஆண்டுகளுக்கான ஆராய்ச்சி தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட ஆராய்ச்சிகள் | 28 | 28 | 23 | 23 | 24 |
| பூர்த்திசெய்யப்பட்ட ஆராய்ச்சிகள் | 14 | 08 | 08 | 15 | 18 |
| கைவிடப்பட்ட ஆராய்ச்சிகள் | 02 | 06 | 03 | 03 | - |
| பெறுபேறுகள் வெளிப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகள் | 03 | 07 | 08 | 03 | 05 |
| பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் | 07 | 07 | 05 | 09 | 04 |

(ஈ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்துகொள்ள முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | இலக்கு | | உள்ளபடியான செயலாற்றல் |
|---|---|---|---|
| i. | 15 அதிகாரப் பத்திரங்களை வழங்குதல் | - | அதிகாரப் பத்திரம் வழங்கப்படவில்லை. |
| ii. | 4 விதாதா வள நிலையங்களைத் தோற்றுவித்தல் | - | 2 நிலையங்கள் மாத்திரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. |
| iii. | வெளித்தரப்பினருடன் கலந்துரையாடல் | - | 2 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. |

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேயிலையை உலர்த்தும் இயந்திரத்திற்கு டீசலுக்குப் பதிலாக விறகுகளைப் பயன்படுத்தும் செயற்திட்டத்திற்கான செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருத்துதலும் பரிசோதனை செய்தலும் (Commissioning and testing) சந்தர்ப்பம் வரையான நேர்ச் செலவுகள் உரிய கம்பனியுடன் சமமான சதவீதத்தில் செலவு செய்யப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயமான ரூபா 5,063,200 தொகை இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் செலவு செய்யப்பட்டிருந்தது. குறித்த திகதியில் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் ஆக்க உரிமையினைப்

பெற்றுக்கொள்வதற்கோ அல்லது தொழில்நுட்பத்தினைப் பொறுப்பேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த 05 ஆண்டு காலத்தில் ரூபா 1,974,893 கிரயமான 14 ஆராய்ச்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

(இ) 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ஈடீ/ஆர்ஈஎஸ்/114/07 ஆம் இலக்க செயற்திட்டத்தின் பொறியியலாளர் வெளிநாடு சென்றதன் காரணமாக செயற்திட்டம் கைவிடப்பட்டதுடன் அதற்காக இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 267,217 ஆக இருந்தது.

(ஈ) விறகு வாயு ஜெனரேட்டர் மூலம் செயற்படுகின்ற 100 கிலோ வொட் மின் பிறப்பாக்கி முறைமையின் நிர்மாண நடவடிக்கை 2002 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 22,106,616 செலவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இதுவரை முடியாதிருந்தது. மேலும், இதிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற மின்சாரம் தேசிய மின்வலு முறைமைக்கு இணைத்துக்கொள்வதற்காக 2004 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 8,955,343 செலவு செய்யப்பட்டிருந்தும் அந்நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | செயற்திட்டம் | அவதானிப்பு |
|---|---|---|
| (i) | டென்ட்ரோ செயற்திட்டம் | 2003 திசெம்பர் 29 ஆந் திகதி செயற்திட்டத்திற்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 2,660,000 தொகை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 07 ஆண்டுகளின் பின்னர் 2010 செப்தெம்பர் 16 ஆந் திகதி அமைச்சிற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது. |
| (ii) | ICAMS செயற்திட்டம் | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக 2003 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற |

| | | |
|---|---|---|
| | | ரூபா 2,639,232 தொகை நடைமுறைக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | 10 கிலோ வொட் மின்சாரத்தை வழங்கல் | 2006 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட இச் செயற்திட்டத்திற்காக ரூபா 4,535,228 செலவு செய்யப்பட்டிருந்தும் அவ்வேலைகள் 2011 யூன் 06 ஆந் திகதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 2 ஸ்ட்ரோக் முச்சக்கர வண்டியினை மின்சார மோட்டாரின் மூலம் செயற்படுத்தும் செயற்திட்டம் | 2007 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டிய இச் செயற்திட்டத்திற்காக ரூபா 1,221,364 செலவு செய்யப்பட்டிருந்தும் அதன் வேலை 2011 யூன் 06 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. மொத்த இருப்பில் ரூபா 3,973,122 தொகையானது (28%) அசைவற்ற இருப்பாக 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் காணப்பட்டது.

II. ஒரு விற்பனை நிலையத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 69,720 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 61,579 பெறுமதியான பொருட்கள் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

### 2.2.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

மீளாய்வாணடின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்த 17 செயற்திட்டங்களின் தொழில்நுட்ப ஒப்படைப்புகள் வருமானத்திற்கு மிகையாக அவற்றின் கிரயம் அதிகரித்ததன் காரணமாக ரூபா 1,525,279 தொகையான நட்டத்தை அடைந்திருந்தன.

### 2.2.6 கூட்டிணைந்த திட்டம்

2009 - 2011 காலப்பகுதி தொடர்பாக நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 மற்றும் 7.4.2 ஆம் பந்திகளின் பிரகாரம் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது வருடத்திற்கு நான்கு தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) செயற்திட்டங்களின் கிரயமிடலும் முகாமைத்துவமும்

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) கொள்வனவுகள்

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு